LIBRARY
1 5 OCT 2005
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART I EXAMINATION IN BBA/ B.COM 1998/99 – EXTERNAL DEGREE
## PROPER & REPEAT (MARCH 2005)
## BBA/ COM 205 COMMERCIAL LAW

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. பின்வரும் சந்தர்ப்பங்களில் தரப்பினர்களின் உரிமைகள் பொறுப்புக்கள் பற்றி ஆராய்க.

அ. ஒரு ஏல விற்பனையாளன் கொழும்பிலுள்ள 38, விஜயவர்த்தனா மாவத்தையில் பழுதடைந்த மோட்டார் வாகனங்களின் விற்பனை நடைபெறும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்தான். குமார் என்னும் தரகுத் தொழில் செய்பவன் மட்டக்களப்பிலிருந்து பழுதடைந்த மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அந்த விற்பனையில் கலந்து கொள்வதற்காக அங்கு வந்து சேர்ந்தான். ஆனால் அந்த மோட்டார் வாகனங்கள் சகலதும் கைமீட்கப்பட்டிருந்தன. குமார் ஏல விற்பனையாளன் மீது நேர இழப்பு மற்றும் செலவுக்காக வழக்கிட்டான்.

ஆ. டேவிட் என்பவன் ஆடி மாதம் 6ம் திகதி தனது 'செவின்' தோட்டத்தை ரூபா 900,000/- விற்பனை செய்வதற்காக எட்வேட் என்பவனுக்கு கொடைமுனைவு செய்தான். ஆடி மாதம் 8ம் திகதி எட்வேட் தனது பதிலில் ரூபா 800,000/- கொடைமுனைவு செய்தான். அது டேவிட்டினால் ஆடி 27ம் திகதி மறுக்கப் பட்டது. இறுதியாக ஆடி 29ம் திகதி எட்வேட் 900,000/- க்கு தற்பொழுது கொள்வனவு செய்யத் தயாராக இருப்பதாகக் கடிதம் எழுதினான்.

02. "அடிப்படைக் கடப்பாடு முறிவுக்கு குற்றவாளியான ஒரு தரப்பினை விலக்களிப்பு வாசகம் ஒரு போதும் பாதுகாப்பளிக்காது என்று சட்டவிதி எதுவும் இல்லை என்பது ஒரு தெளிவான விடயமாகும்". இந்தக் கூற்றினை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

03. பொருட்கள் மீது பணம் பெறப்படாத விற்பனையாளனின் உரிமைள் பற்றி பொருட்கள் விற்பனைச் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுடன் ஆராய்க.

04. அ. 1950ம் ஆண்டு 43ம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளரின் அதிகாரங்கள் யாவை?

ஆ. நடுக்கட்டல் (Arbitration) ஒரு கைத்தொழில் பிணக்கினைத் தீர்த்து வைப்பதற்கான நடைமுறையினைச் சுருக்கமாக எழுதுக.

05. "ஒரு கம்பனியானது அதன் சொந்தக்காரர்களான பங்குதாரர்களிலும் அதனை முகாமை செய்யும் பணிப்பாளர்களிலும் இருந்தும் வேறானதும் தனியானதும் ஆகும்".

சொலமன் எதிர் சொலமன் ஆராய்க.

06. ஒரு காசோலையை குறுக்கு கோடிடுவதன் மூலமான அனுகூலங்கள் யாவை? வெவ்வேறு வகையான குறுக்கு கோடிடுதலுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

07. பின்வருவனவற்றில் நான்கினைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

அ. அவசியத் தேவைக்கான முகவராண்மை

ஆ. பொதுப்பிழை

இ. பங்குடமைக் கலைப்பு

ஈ. மதிபலன்

உ. தொழில் நியாயசபை